ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

வியாபாரஸ்தலத்திற் சென்று வேண்டியசாமான்களை வாங்கிக் கொண்டு, அதையெல்லாம் அனுபவிக்கு மிடஞ்சென்று, அவைகளை வைத்துக்கொண்டு சுகமாயிருப்பதுபோல் கர்மபூமியாகிய நம்பாரத பூமி யென்னும் வியாபாரம்செய்யுமிடத்திற்குப் பாக்கியவசத்தால் வந்த கர்மாதிகாரம்பெற்ற ஜீவன் தனக்குரிய வியாபாரத்தைச்செய்து புண்ணியத்தை ஸம்பாதித்து அதன்பயனை அனுபவிக்குமிடமான சுவர்க்கம் முதலிய லோகாந்தரம் சென்று சுகமாயிருக்க வேண்டியதற்காக கர்மகாண்ட நூல்களில் கர்மயோகங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாகப் பெரிய சந்தைகளிலோ, மார்க்கட்டுகளிலோ வியாபாரத்திற்காக சாமான்களை எல்லோரும் விரித்துவிட முடியாது. ஆனால் ஆங்கு வியவஸ்தை செய்யுமதிகாரிகள் போட்ட சட்டப்படி பிரவேசக்கட்டணம் செலுத்தி, சீட்டுவாங்கியதின் மூலம் அனுமதிக்கப்பட்டவர்தான் வியாபார ஸாமான்களை விரிக்கலாம். அதுபோல் கர்மயோகங்களைக் கிரஹிக்க வருபவர்களுக்காக அவைகளை விவரிக்க எல்லோரும் அதிகாரியாக மாட்டார்கள், தர்மவியவஸ்தையைச் செய்யும் விதிவாக்கியமும் அதனைத் தழுவிவந்த மீமாம்ஸாநியாயங்களும் போட்ட சட்டப்படி அதிகாரபத்திரம் பெற்றவர்களே கர்மயோகங்களை விவரிக்கலாம். இதனால் தற்காலத்தில் கர்மயோகத்தைக் கண்டபேர் விவரிக்கத் தலையெடுப்பது அதிவாஹஸமேயென்றேற்படுகின்றது. சாமான்களை வாங்கச் செல்லுவோரும் அவர்களுக்குரிய மரியாதைப்படி ஒழுங்காய் வாங்கி வரவேண்டுமேயல்லது, ஏமாற்றியோ, பலாத்காரமாகவோ ஸாமான்களை யெடுத்து வந்துவிடும்பக்ஷத்தில் அவர்கள் குற்றவாளியாகி போலீஸார் சிக்ஷைக்காளாகுவார்கள். இதுபோலவே கர்மயோகத்தை அனுஷ்டிக்க முயலுபவர்களும் அவர்களுக்குரிய அதிகாரப்படி ஒழுங்காக அனுஷ்டிக்க வேண்டுமே யன்றி, அதிகாரம் பெறாதவர்கள், வேஷம்போட்டு ஏமாற்றியோ, அல்லது பலாத்காரமாக அனுஷ்டிக்க யத்தனித்தால் அதன்பயனை யடைய மாட்டார்களென்பது மாத்திரமில்லை குற்றவாளிகளாயுமாவார்கள். யமதர்மராஜாவின் சிக்ஷைக்கு மாளாவார்கள். அதனாற்றான் சாஸ்திரங்களில் தர்மோபதேசம் செய்பவரின்னாரென்றும், தர்மாதிகாரிகளின்னாரென்றும்வியவஸ்தைசெய்யப்பட்டிருக்கிறது. சந்தைக்குள் நுழைந்த பிராணிகளெல்லாம் வியாபாரத்திற்காகவே வருவதில்லை கீழே சிந்திச் சிதறிக் கிடப்பதைப் பொருக்கித் தின்னவந்த ஆடு மாடுகள் வியாபாரமா செய்கின்றன? இல்லை ஆகையால் சாஸ்திரத்தில் போதிக்கிறபடி அந்தந்த கர்மங்களில் அதிகாரம்பெற்றவர்கள், ஸதாசாரியன் உபதேசப்படி அவைகளைத்தெரிந்து அனுஷ்டித்து சிரேயஸ்ஸை யடைவார்களாக.

பத்திராதிபர்,

ஆர்யதர்மம்.

ப்ரமோத-ஸூ தை-மீ ௧௰௨.

ஆத்துமகுணங்கள்.

சாரீரங்களான ஸம்ஸ்காரங்கள் 40ம் சரிவரச் செய்யப்பட்டு ப்ரம்மவர்ச்சஸமெனப்படும் ப்ரம்ம தேஜஸ்ஸு பூர்ணமாயிருந்தாலும் ஆத்துமகுணங்களில்லாவிட்டால் அது பயன்படாதாம். ஆத்துமகுணங்கள் நிரம்பியிருந்துவிட்டால் சரீரஸம்ஸ்காரம் ஒன்றிரண்டு குறைந்தாலும் தெரியாது. ஓர் குடத்தினுள்ளே அசுத்தமான வஸ்துக்களை வைத்து வெளியே எவ்வளவு சுத்தி செய்தாலும் அது அசுத்தமாகவேதானிருக்கும். அதுபோல் காமம், குரோதம், லோபம், மோஹம், பொறாமை, அஸூயை முதலிய அசுத்தமான துர்வாஸனைகள் அந்தக்கரணத்திலடங்கிக்கிடக்க, சரீரத்தின் வெளிப்புறத்தில் ஸம்ஸ்காரம் செய்வதாலென்ன பயன்? ஆனால் மனமொன்றுமாத்திரம் சுத்தமாயிருந்தால் போதுமா என்று கேட்கக்கூடாது. சரீரசுத்தியும் அவசியம் வேண்டியதுதான். ஒன்றிரண்டு சரீரஸம்ஸ்காரம் குறைந்தாலும் ஆத்மகுணங்களிருந்துவிட்டால் அது தெரியாது. ஆத்மகுணத்தாலேயே அக்குறையும் நீங்கிவிடும். இங்கு ஆத்மகுணங்களென்பது தார்க்கிகநூல்களில் புத்திமுதலாகப்படிக்கப்பட்ட ஒன்பதும் ஆத்மகுணங்களாமென்று கூறப்பட்டிருப்பவைகளில்லை. ஆத்மாவென்றால் ஜீவாத்மாவென்று தார்க்கிகர் அபிப்பிராயப்படுகின்றனர். இங்கு அப்படியில்லை. ஆனால் அந்தக்கரணமே ஆத்மாவெனப்படுகின்றது. அதன் குணங்களும் தயை முதலாகஸ்மிருதிகளில் கூறப்பட்டவைகளாகும். ஆகவே தார்க்கிகர் கூறும் ஆத்மகுணமல்ல இங்கு கூறப்படுவது. கௌதமஸூத்திராதிகளில் கூறப்படும் தயைமுதலியவைகளே இங்கு ஆத்மகுணங்களெனப்படுகின்றன. காமக்குரோதாதிகள் அந்தக்கரணகுணங்களாயினும் அவை கெட்டகுணங்களாகையால் சிரமப்பட்டாவது விலக்கத்தக்கவை. விலக்க விலக்க திரும்பி அவை வந்துகொண்

டேயிருப்பது ஸஹஜம். நீரில் படர்ந்த பாசியைத் தள்ளத்தள்ளி மீண்டும் வந்து மூடுவதுபோல் காமாதிகளை ஸ்வல்பயத்னத்தால் ஒருவாறு விலக்கினாலும் அதற்கு அதிகமாக வந்து சூழ்ந்துவிடும். ஆகவே அவைகளை விலக்க பெருமுயற்சிசெய்தாலன்றி முடியாது. காமக்குரோதாதி வேகத்தினாலிழுக்கப்பட்டுக் கஷ்டப்பட்டவர்களுக்கு இதன் உண்மை தெரியும். சுபவாஸனைகளாகிய தயாதிகளை நிலைக்கச் செய்வதும் கஷ்டமே. சிரமப்பட்டு தயாதிகளைச் சம்பாதித்து அந்தக்கரணத்தில் கொண்டுவிட்டால் அறியாமலே அகன்றுவிடும் என்ன ஆபத்து வந்தாலும் ஸத்தியாதிகளை நழுவவிடுவதில்லையென்று நினைப்பது கஷ்டத்திலும் கஷ்டம். அப்படியிருக்க அதை நடப்பில் கொண்டுவருவது எவ்வளவு கஷ்டமென்பதைச் சொல்லவேண்டியதுமுண்டோ விவேகவைராக்யாதிகளைப் பெற்றிருப்பவன்தான் ஸத்தியாதிகளை சம்பாதித்துக் கொள்ளுவான். அதிதீவ்ரமான வைராக்யத்தையடைந்தவன்தான் அவைகள் நிலைக்கும்படி செய்துகொள்ளமுடியும். காமாதிகளையும் திரும்பிவாராமல் தடுக்கவும் முடியும். அதனால் விஷயங்களில் தோஷதிருஷ்டி முதலிய அப்பியாஸங்களால் முதலில் வைராக்கியத்தை ஸம்பாதித்து, விஷயாசையால் அது கெடாமலிருக்க விவேகத்தையுமடைந்து வைராக்கியத்தை திடப்படுத்திக் கொண்டு, அதின் வலிமையால் காமாதிகளை அடியோடு அழித்து ஸத்தியாதிகளான நல்ல குணங்களைப் பெற்று யாவரும் சுகப்படுவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

௨

பிராமண மஹாசபை, சேங்காலிபுரம்.

12—1—30ல் மேல்கண்ட சபையானது ஹிந்துமத சம்பந்தமான சகல தர்மங்களையும், உபன்னியாச மூலமாய் பாவச்செய்யவும், பரிசிலனைசெய்யவும்நோக்கத்துடனும், அத்யாத்ம யோகம் தென்னிந்திய சங்கீதம் முதலிய புஸ்தகங்களுக்கு ஆசிரியரான ஸ்ரீமான் நடராஜ அய்யர் அவர்களைத் தலைமையாகக் கொண்டும், மகா-ள-ள-ஸ்ரீ நாராயண தீக்ஷிதர், S. தியாகராஜ அய்யர், K. S. வெங்கட்டராம அய்யர் (காரியதரிசி), சுப்பராம தீக்ஷிதர் V. சுப்பிர

மணிய அய்யர், V.பஞ்சாபகேசஅய்யர், அப்பாசாமி சாஸ்திரிகள் சிவசுப்பிரமணிய அய்யர், இவர்களை மெம்பாராகக் கொண்டும் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்த சபையின் ஆதரவில் மார்கழி மீ ல் பிரும்மஸ்ரீ சுப்பிரமணிய தீக்ஷிதர் அவர்களின் கிருஹத்தில் நடந்த உத்ஸவத்தில் திருப்புகழ் பஜனை கோஷ்டியும், உபன்னியாசங்களும் நடைபெற்றன. தை-மீ 6-ல் ஷை சபையின் ஆதரவில் M. R. Ry. K. S. வெங்கட்டராம அய்யர் அவர்களின் ஆனந்தாச்சிரமம் என்னும் கிரஹத்தில் ப்ரம்மஸ்ரீ வித்வத்பூஷணம் உள்ளூர் K. வைத்தியநாத சாஸ்திரிகள் அவர்கள் "காயத்ரீ" யின் அர்த்தத்தையும், ஸந்தியா வந்தனத்தின் ஆவசியகத்தையும், ப்ரம்மஸ்ரீ, ஸீதாராம சாஸ்திரிகள் அவர்களால் எழுதப்பட்ட ஸந்தியாவந்தனபாஷ்யத்தின் அபிப்பிராயத்தையும் உபன்னியாசம் செய்தார். பிறகு, ப்ரம்மஸ்ரீ,அனந்தராமதீக்ஷிதர் அவர்கள் ஸந்தியாவந்தனத்தில் யோகம் முதலிய ஸகல ஸாதனங்களும் அடங்கியிருப்பதை வேதத்தின் வாயிலாக வித்யாரண்யஸ்வாமிகள் பாஷ்யத்துடன் சொற்பொழிவுடன்உபன்யஸித்து எல்லோரையும்நம்பிக்கையுடன் அனுஷ்டித்து ஸர்வ மங்களத்தையும் அடையும்படி கேட்டுக் கொண்டார். இந்தசபைக்கு ஊரிலுள்ள எல்லா அக்னிஹோத்திரிகளும் பிரமுகர்களும் விஜயம் செய்து இந்த உபன்யாசங்களைக் கேட்டு ஆனந்தித்தார்கள். பல ஆஸ்திக வித்வான்களைக்கொண்டு இந்த சபையில் ஹிந்துமத ஸம்பந்தமான ஸகல தர்மங்களும் உபன்யஸித்து அனுஷ்டிக்கும்படி செய்யப்படும்.

T. S. நடராஜசாஸ்திரியள்.

அக்கிராஸனர் பிரஸங்கம்.

ஜலக்கிராமமெனப்படும் "ஜல்கான்" என்ற கிராமத்தில் 29—12—30௳ முதல் நடந்த அகில பாரதீய வர்ணாசிரமதர்ம ஸ்வாராஜ்யசங்கத்தில் அக்கிராஸனம் வஹித்தவரும் ஸ்ரீமத் வல்லபாசார்யப்ரதான பீடத்திலிருக்கும் கோஸ்வாமி திலகஸ்வாமிஜீயின் புத்திரஇரத்தினமானவரும் ஆகிய வித்தியாஸாகர ஸ்ரீகோஸ்வாமி தாமோதரலால்ஜீ அவர்களின் உபந்யாஸச் சுருக்கம்.

(1) தர்மரக்ஷையே பிரதான உத்தேசியம்.

மஹாநுபாவர்களாகிய தர்மாசாரியார்களே! ஸகல சாஸ்திரங்களிலும் கூர்மையான புத்தியுள்ள புத்திமான்களே! தர்மத்திலேயே நிஷ்டைபெற்ற சிரேஷ்டிமார்களே! ஸநாதனதர்மவழியைப் பின்பற்றும் மற்றுமுள்ள ஸபையோர்களே! நமது பாரதநாடு தர்மப்பிராணமான தேசமென்பது தங்களுக்கெல்லாம் தெரிந்த விஷயமே. அதிலும் தென்னாட்டிற்கு ஸமீபமான இந்த பூப்பிரதேசம் வெகுகாலமாய் தர்மரக்ஷணைக்காகவே கச்சைகட்டிஉழைத்து வருகிறதென்பது மிகவும் பிரசித்தமானது இந்த நம் பாரதபூமியில் ஸ்வபாவமாகவே தர்மத்தையே உயிர்நிலையாகக்கொண்ட பிராம்மணர்களும், தர்மரக்ஷணத்தையே முக்கிய விரதமாகக் கொண்ட க்ஷத்திரியவீரர்களும், தர்மத்தையே நாடிநிற்கும் வைசியர்களும், தர்மமார்க்கத்தையே அநுஸரிக்கும் சூத்திராதிகளும் தம் தம் தர்மத்தை ரக்ஷிப்பதற்காகவே பிராணனைக்கூட விடத் துணிந்தவர்களென்பதும் யாவரும் நன்றாயறிந்த விஷயமே. பல சொல்லியென்ன? இங்குள்ள ஸ்திரீகளும் தங்கள் தர்மத்தையும் கற்பையும் காப்பாற்றத் துணிந்தவர்களே. சராசரகுருவாகிய புராணபுருஷனை ஸ்ரீகிருஷ்ணபகவானும் தர்மரக்ஷணத்திற்காகவே யுகந்தோறுமவதரித்து தர்மத்தை நிலைநாட்டுகிறாரென்பது நம்மவர்க்குத் தெரியாததில்லை அத்தகைய தர்மரக்ஷையைப் பற்றி விசாரிப்பதற்காகவே இப்பொழுது நாமெல்லோரும் பல கஷ்டங்களைப் பொருத்துக்கொண்டாவது வெகு தூரதேசங்களிலிருந்து இங்கு உற்சாஹத்துடன் வந்து கூடியிருக்கிறோம். ஸ்வதர்மரக்ஷையே நமக்கு முக்கியமான உத்தேச்யமென்பதில் எவருக்கும் ஸந்தேஹமில்லை. ஸநாதனதர்மஸாம்ராஜ்யத்தை ரக்ஷிப்பதிலேயே தீக்ஷையெடுத்துக்கொண்ட தேவர்களுக்கும் குருக்களான பிரஹஸ்பதிபகவான், பாரத்வாஜமஹரிஷி முதலியவர்கள் நமக்குப் பூர்வாசார்யர்களாயிருந்தார்கள். அது நம்மவர் பாக்கியமே. அந்த தர்மரக்ஷணத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்ட தங்களால் இந்த மஹாஸபையில் நான் அக்கிராஸனத்திற்காக வரிக்கப்பட்டு அதிலமர்த்தப்பட்டு தர்மரக்ஷைக்காகவே இந்த ஸாஹஸத்தை வஹிக்கத்துணிந்தேன். ஸாதிப்பதற்குக் கஷ்டமான பெரிய கார்யத்திலும் நமக்கெல்லாம் கோவர்த்தனகிரியைக் கைவிரலால் தூக்கின ஸ்ரீபகவானுடைய பாதாரவிந்தம்

தான் சரணமென்பதைமறந்துவிடக்கூடாதென்பது என்னுடைய பலமான நம்பிக்கை. ஆகையால் அந்த பகவானே இந்தக்கார்யத்தில் எனக்கு சக்தியைக் கொடுக்கவேணுமென்பதற்காக முதலில் அவரது பொற்பாதகமலத்தைப் பணிந்து பிரார்த்தனை பண்ணிக் கொள்ளுகிறேன். அன்புள்ள ஸபையோர்களே! பலவித தர்மங்களுள் வர்ணாசிரமதர்மமொன்றுதான் ஸர்வாதாரமென்றும் ஸர்வ சிலாக்கியமென்றும் தீர்மானிக்கப்படுவதால் விசேஷதர்மமாதல் பற்றி விசேஷமாய் ரக்ஷிக்கவேண்டியதாகிறது. இதை ரக்ஷிக்காவிடில் மற்ற எல்லா தர்மங்களும் ரக்ஷிக்கப்படாமலே போய்விடும் தற்காலத்தில் சிலர் விதேசியர்களுடைய மோஹதீக்ஷையில் தீக்ஷை பெற்று விதேசியர்களின் ஆழ்ந்த நோக்கமென்னும் பெரிய மடுவில் முழுமையும் மூழ்கி இந்த வர்ணாசிரமதர்மத்தை பலாத்காரமாகவும் ராஜ்யதந்திரத்தாலும் கபடத்தாலுமடியோடு அழித்துவிட கங்கணங்கட்டி விரதம் வைத்துக்கொண்டார்கள் என்பதை நாலாபக்கத்திலும் கண்ணை விழித்துப்பாருங்கள். ஆகவே இந்த விஷயத்தில் அவர்களோடு நம் ஸநாதனதர்மிகளுக்குப் போராடும்படியான காலம் நேர்ந்திருக்கிறது. அதனால் அவர்கள் எவ்வளவு பலத்தோடு நமக்கு பிரியமான தர்மத்தை அழிக்கக் கோருகிறார்களோ அவ்வளவு பலத்தோடாவது அல்லது அதற்கதிகமாகவாவது பாடுபட்டு ஸர்வஜனஹிதமான வர்ணாசிரமதர்மத்தை ரக்ஷிக்கக் கச்சை கட்டிக் கிளம்பவேண்டும். ஸ்வதர்மத்தை ரக்ஷித்தாற்றானே எல்லாம் ரக்ஷிக்கப்பட்டதாகும்.

(2) ஸ்வாராஜ்யமும் விரும்பத்தக்கதே.

ஸபையோர்களே! சிலர் இப்பொழுது நம் பாரத வாஸிகளின் பரமோத்தேசம் ஸ்வாராஜ்யம் பெறுதலே என்று ப்ரதானமாய் நினைக்கிறார்கள். நமக்குமிவ்விஷயத்தில் யாதொரு விரோதமுமில்லை. நாமும் ஸ்வாராஜ்யத்தை விரும்புகிறோம். ஆனால் ஸ்வதர்மத்தையும் வர்ணாசிரமதர்மத்தையும் அழித்துவிட்டுக் கேவலஸ்வாராஜ்யத்தை நாம் விரும்பவில்லை. எந்த புத்திமான்தான் தர்மமில்லாத ஸ்வாராஜ்யத்தில் ஆசைகொள்வான்? தர்மமில்லாத ஸ்வாராஜ்யம் கிடைத்தாலும் ஸ்திரமற்றதாயும் கஷ்டத்தை விளைவிப்பதாயுமாகுமேயன்றி ஸ்திரமாகவும் சுகமாகவுமாகாது. ஸ்வதர்மத்தையே விட்டொழித்த அதர்மிஷ்டர்களுக்குக் கிடைத்த ஸ்வாராஜ்யம் ஸ்திரமில்லாமலும் கஷ்டத்தைக் கொடுப்பதாயுமொருகாலத்தி

விருந்ததென்பது பத்திரிகையைப் படிக்கும் மேதாவிகளுக்குத் தெரியாததில்லை. ஸுராஜ்யம் சுககரமேயன்றி கேவலஸ்வாராஜ்யம் சுககரமாகாது. ராவணன் ராஜ்யமாண்ட காலத்திலும் ஸ்வாராஜ்யந்தானிருந்ததாம். வேனமஹாராஜன் காலத்திலும் ஸ்வாராஜ்யமேயிருந்ததாம். எந்த புத்திமான்தான் ராவணனுக்கும் வேனனுக்கும் பாரதீயஸ்வாராஜ்யமில்லையென்று சொல்லுவான். ஸ்வாராஜ்யமிருந்தும் அவர்கள் நாளில் ஸுராஜ்யமில்லையென்றே சொல்லவேண்டும். அதனாற்றான் அப்பொழுது பிரஜைகளுக்கு பெரிய கஷ்டம் நேரிட்டுக்கொண்டே இருந்தது. சங்கங்களில் பெரிய கிளர்ச்சிகளும் நிகழ்ந்துகொண்டே இருந்தன. அதனால் புத்திமான் ஸுராஜ்யம் கிடைக்க ஆசைப்படவேண்டுமேயன்றி கேவலஸ்வாராஜ்யத்திற்குமாத்திரம் ஆசைப்பட்டுவிடக்கூடாது. ஸுராஜ்யமென்பது தர்மத்தாற்றான் கிடைக்கும். தர்மம் நிலைத்தால் ஸகல ஜனங்களும் அததன் வரம்பிலேயே நிற்கும். ஸ்வதர்மம் தவறாமல் தன் வரம்பிலேயே எல்லோரும் நிற்பார்களேயானால் அப்பொழுது கிடைத்த ஸ்வாராஜ்யந்தான் ஸுராஜ்யமாகுமென்று அறிஞர் அறிந்ததே.

(3) இச்சங்கம் இரண்டையும் விரும்புகிறது.

இந்த வர்ணாசிரமதர்மஸ்வாராஜ்யசங்கம் வர்ணாசிரமதர்மத்தையும், ஸ்வாராஜ்யத்தையும் விரும்புகிறதென்று இதன் பெயராலேயே தெரிந்துகொள்ளலாம். இந்த மஹாஸபையில் சேர்ந்திருப்பவர்களெல்லோருமிரண்டையும் விரும்பிக்கொண்டே இங்கு கூடியிருக்கிறார்கள். கூட்டந்தான் பெரிய பலமாகும். முன்னொரு காலத்தில் தவமே பலமாயிருந்தது. பிறகு யாகாதிகளே பலமாயின. பிறகு பூஜை பலமாயிருந்தது. இப்பொழுதோவெனில் சங்கந்தான் பலமாகும். எப்பொழுதுமே சங்கமும பலமாயிருந்ததுதான். ஆயினும் இக்கலியில் விசேஷமாய் சங்கத்திற்றான் சக்தி அமைந்துள்ளது.

(4) அதற்காக ஒற்றுமையின்மையைத் தூர விலக்கவேண்டும்.

வர்ணாசிரமதர்மத்தையும் ஸ்வாராஜ்யத்தையும் விரும்பும் நமக்கு பிராமணன்முதல் அந்தியஜாதிவரையும் பெரிய கூட்டமிருப்பதுபற்றி நாம் பலமுடையவர்களாகவே ஆவோம். ஆனால்

இதற்கிடையூறாக பாரதவாஸிகளான நமக்குள் பரஸ்பரம் ஸிநேஹமும் சுபத்தையே நாடி ஒற்றுமையுமில்லாமல் போய்விட்டதால் நாம் கூட்டமாயிருந்தும் பலமற்றவர்களாய்விட்டோம். நாம் பரஸ்பரம் ஒருவரையொருவர் ஏமாற்றப்பார்க்கிறோம், அவமானப் படுத்துகிறோம், துவேஷிக்கிறோம் ஒவ்வொருவனுடைய தோஷங்களைத் தேடிப்பிடித்துத் தெரியாவிடில் பழியாகச் சமத்தியாவது பிரகாசப்படுத்த முயலுகிறோமென்பது பிரஸித்தமே. அதனால் நமக்குள் பேதபுத்தியும் அவநம்பிக்கையும் பரவிவருகிறது. ஒருவரையொருவர் நம்மவர் நம்பவில்லை. அதனால் பொதுவில் ஒரு கார்யத்தை ஆரம்பிக்கவே முடிகிறதில்லை. ஒருவாறு ஆரம்பித்துவிட்டாலும் அந்தக் கார்யம முடிவுவரை நிறைவேறுவதுமில்லை. நடுவில் நசித்துவிடுகிறது. அதனால் முதலில் தேசதேசாந்தரங்களின்று வந்த ஸபையோர்கள்முன்னிலையில் நான் ஆக்கிரஹத்தோடு தெரிவிப்பது இது ஒன்றே அதாவது— இதற்குமேலாவது இந்திய மாதாவின் வயிற்றிற்பிறந்த ஸஹோதரர்களான நாமெல்லோரும் பரஸ்பரம் ஒற்றுமையையடைந்து வர்ணாசிரமதர்மஸ்வாராஜ்யகார்யத்தில் ஸஹாயம் செய்வது என்பதை விரதமாகக் கொள்ளவேண்டுமென்பதே. நாம் பரஸ்பரம் ஸஹோதரர்களல்லவா. நம்மவரையே நாம் நம்பாமல் துவேஷப்பட்டுக்கொள்வோமாயின் விதேசியர்களா நமக்கு க்ஷேமத்தைச் செய்யப்போகிறார்கள். அதனால் நாம் பரஸ்பரம் புத்தியை நிலைத்துக்கொண்டு பிராணனைக் கொடுத்தாவது வர்ணாசிரமதர்மஸ்வாராஜ்யகார்யத்தை நிர்வஹிக்கவேண்டும்.

(5) ஸநாதனதர்மஸபையார் ராஜகீயத்திலும் அதிகாரம் பெறவேண்டியது.

ப்ராம்மணோத்தமர்களுள் முன்னிருந்த மஹாபுருஷர்கள், தபஸ்வினாலும், பலத்தினாலும், வித்தையாலும், தனத்தினாலும், ராஜகீயத்தில் எந்த அதிகாரத்தைச் சம்பாதித்துக் கொண்டிருந்தார்களோ! எந்த அதிகாரங்களில் இப்பொழுதும் பரம்பரையாகப் பிராம்மணோத்தமர்களையும் சிற்சிலவிடத்தில் ஏதோருவிதமாக வைத்திருக்கிறார்களோ, அந்த அதிகாரங்களில் இப்பொழுது சில அனதிகாரிகளைஸ்தாபனம் செய்திருக்கிறார்கள். அப்படிச் செய்துவிட்டு இவர்கள் 'அனதிகாரிகளென்பதை ஏற்படுத்தியவர்களே சொல்லிக் கொள்ளுகிறார்கள். அதனால் அந்த அதிகாரங்கள்

ருக்கு மனம் சோரவிடில் விவாஹாத்து செய்து விட வேண்டு மென்று சிலர் சட்டமிடப் பார்க்கின்றனர். இப்படி எவ்வளவு விவாஹங்கள் செய்யப்படலாம். எவ்வளவு ரத்து செய்யப்படலாம் என்ற கணக்கு சித்திரகுப்தனுக்கும் புரியாதுபோலத் தோன்றுகிறது. இவையெல்லாம் வியபிசாரத் தடை கக்ஷிக்காருக்கும் ஸம்மதந்தானோ? அல்லவோ? தெரியவில்லை. அவர்களுக்கு ஸம்மதமில்லாவிடில் இதைப்பற்றியும் அவர்கள் ஏதாவது பேசியிருப்பார்கள். அப்படி பேசியிருப்பதாகத் தெரியவில்லை' ஸம்மதமாகவே இருக்குமாயின் வியபிசாரத்தடை செய்வதனுல் என்ன பயனோ தெரியவில்லை. எந்த கக்ஷியைப் பேசினுலும் வேதத்தைப் பிரமாணமாகக் கொடுத்து விடத் துணிந்து விடுகிறார்கள்' அதையே வெகுரஸமாகக் கேட்போரும், மதிப்போருமே அதிகமாகி விட்டார்கள். வேதத்தின் உண்மைக் கருத்தை விளக்குகின்றவர் குறைவாயிருப்பதாலும், அவர்களும் அதிகமாக வெளிகளில் புறப்படாதபடியாலும், அவர்கள் பேசும் பேச்சு ஒருவர் காதிலும் விழுவதில்லை. இவ்வளவு ஸமாசாரங்களும் அந்த வைதிகர்களுக்கு இப்பொழுது தான் கொஞ்சமாகக் காதில் விழுகிறது. காதில் கேட்டபிறகும் அவர்கள் ஸ்வபாவத்தைவிட்டு வெளிப்பட்டபாடில்லை. ஆகவே எதிர்வாதமில்லாதபடி ஒவ்வொரு தினத்திலும் விபரீதாசார விஷயங்கள் தினசரிப் பிரசுரங்களில் வெளிவருவதைப் படிக்கின்றவர்கள் அதுவே சரியோவென்று பிரமத்தையடைகின்றனர். அது சரியல்ல. சாஸ்திரசித்தாந்தத்தை சரிவரத்தெரிந்துகொண்டு ஒரு காரியத்தை நிச்சயிக்க வேண்டுமேயன்றி அவசரப்பட்டு பிரமித்துவிடுவதும், அதற்குத் தக்கவாறு நடத்திவிடுவதும் பரலோகத்தை நம்பின பிராமணிகர்களுக்கு சிரேயஸ்கரமாகாது. ஆகையால் விவாஹம் செய்வதை சாஸ்திரவிசாரம்செய்து நிச்சயித்தபடியே தீர்மானிக்கவேண்டும்,

பத்திராதிபர்.

பத்திரிகை அவசியமில்லையா?

இதற்குமுன் 48-வது சஞ்சிகையில் ஈசன் அருள் வேண்டும் என்ற தலையின் கீழ்பத்திரிகையைப்பற்றி எழுதினேன். மீண்டும் இங்கு அதையே வற்புறுத்த வருகிறேன். ஆதியில் ஸ்ரீமான்

நாம் "सर्वः स्वार्थं समीहते" "எல்லோரும் தன்னிஷ்டத்தையே விரும்புவார்" என்ற நீதியை அவலம்பித்து ஸ்வதர்மத்தை விட்டவர்களை உபேக்ஷித்தோமேயன்றி த்வேஷிக்கவில்லை. இப்படியிருந்தும் தலையில் தடியால் அடிப்பதுபோல்எவர்கள் நம்முடைய ஸ்வாதீனத்திலிருக்கும் வர்ணாசிரம தர்மத்தைவிடச்செய்ய விரும்புகிறார்களோ? அதற்காகவே பெரிய ப்ரயத்னம் செய்கிறார்களோ, அதற்குப் பரிஹாரம் செய்யவேண்டியது நம்முடைய அவசிய கார்யமாகும். ஆத்மநாசத்திலும், தர்மநாசத்திலும், ஸந்தோஷமோ உபேக்ஷையோ சிரேயஸ்கரமல்ல. அதற்காக நாமவெல்லோரும் ஒன்றுகூடி தர்மரக்ஷணத்திற்கும் ஸமாஜ ஹிதமான அதிகாரம் பெறுவதற்குமுசிதமான உபாயங்களை எடுத்துக்கொள்ளவேண்டும். சிலர் தர்மத்தை உபேக்ஷித்தாவது, அல்லது அடியோடு அழித்துவிட்டாவது ஸ்வாராஜ்யமே பெறத்தக்கதென்று ஆவல்கொண்டு அஸம்பிளியிலும், கௌன்ஸில்களிலும், முனிஸிபல் கமிட்டிகளிலும், மற்றுமுள்ள ஸ்வதேசிய ராஜாங்க ஸபைகளிலும் பிரவேசித்து பிரதான அதிகாரங்களையுமடைந்து தன்போலுள்ள சிலரைச் சேர்த்துக்கொண்டு ஏமாற்றியும், பலாத்காரமாகவும் ஸனாதன தர்மத்தை விட்டுவிடச் செய்யக்கருதுகிறார்கள். பிரதிவருஷமும் தர்மத்தைக் கெடுக்கக்கூடிய புதிது புதிதானப் பிரஸ்தாவங்களைக்கொண்டுவருகிறார்கள். பாரதவாஸிகளான ஸநாதன தர்மிகளுக்குப் பலவிதத்திலும் இஷ்டமில்லாத அந்தப் பிரஸ்தாவங்களையும் பிரமாண மூலமெனச் சாதிக்கவும், வியவஹாரத்திலும், நடப்பிலும் கொண்டுவருவதற்காகவும் விரும்புகிறார்கள். அதனால் ஒவ்வொரு ஸமயத்தில், தர்மநாசமும் ஸமாஜங்களில் சூழ்ச்சிகளும், ராஜாங்கங்களில் கொழப்பமும் நேருகிறது. இதைப் பரிஹரிக்கவுமுபாயந்தேடவேண்டியது.

8. ஸனாதனதர்மிகள் அஸம்பளி முதலியவிடங்களில் தங்களுக்கும் ஒரு ஸ்தானத்தை ரக்ஷித்துக் கொள்ளவேண்டியது.

பாரதவாஸிகளானபண்டிதர்கள் முன்னிலையில்ராஜநீதி விஷயமானபிரச்னத்தைக்கொண்டு வந்தாலும் பயன்படுவதில்லை. இந்த மூலையில்பிராசீனபண்டிதர்கள் ஒருக்காலும் திருஷ்டிவைக்கவில்லை. சிலபேர்களின் திருஷ்டி விழுந்தாலும் அவர்கள் ஞான வழியி

னேயே எதோரு விதமாகப் பேசிக்கொண்டு ப்ரம்ம ஞானிகள் போல ராஜகீயப் பிரதானஸபைகளில் நம்மவருள் சிலர் அதிகாரம் பெற்றாலும், பெறவிட்டாலும் பண்டிதர்களான நமக்கு அதனால் என்ன பிரயோஜனம் என்று பதிலளிக்கிறார்கள். அந்தோ! என்ன கேடு ; என்ன பயங்கரமான பரிணாமம்; எந்த தர்மத்தினால் நாம் ஜீவிப்போமோ ? எது பாரதீயர்களுக்கு உயிர்நிலையோ? அந்த தர்மத்தை விதேசியர்களோடு கலந்து தர்மவிரோதிகளான நம்மவர்களே அழிக்கப்பார்க்கிறார்கள். அப்படியிருந்தும் நாம் உறக்கத்தை விட்டபாடில்லை. சுகமாகவே உறங்குகிறோம். தர்மத்தைக்கெடுக்க தலையெடுத்த பிறர் நம் பாரதமக்களை ஏமாற்றி ராஜ ஸபைகளில் தங்களுக்கு ஸ்தானம் கிடைக்க நம்மிடமே ஓட்டு கேட்டு வருகிறார்கள். நம்மிடம் ஓட்டு வாங்கியவுடன் அச்சபைகளிற்சென்று நமக்குப் பிரியமான தர்மத்தையே தங்களிஷ்டப்படி கெடுத்துவிடுகிறார்கள்.

௯. ஓட்டு செய்வோர்கள் தன் மனதை ரக்ஷித்துக் கொள்ளவேண்டியது.

முதலில் வெகுவிரைவாக இதை விலக்க ஓர்வழி தேடவேண்டியது. கூட்டமாக ஆங்காங்கு சபைகளிற்சென்று மறைந்திருந்து தர்மத்தைக் கெடுப்பவர்களின் சொரூபத்தைப் பிரகாசப்படுத்தவேண்டும். தர்மவிரோதிகளுக்கு ஓட்டுக்கொடுப்பவர்களைத் தடுக்கவேண்டும். எல்லாப் பிரதேசங்களிலும் வர்ணாசிரம தர்மத்தை இரக்ஷிக்கும் ஸபைகளை ஸ்தாபிக்கவேண்டியது. தர்மோபதேசம் செய்யத்தகுந்தவர்களைக்கொண்டு எங்கும் தர்மப் பிரசாரம் செய்யச் சொல்லவேண்டும். அஸம்பளி முதலிய பெரிய ஸபைகளிலும், காங்கிரஸ்மஹாஸபையிலும் தர்மத்தின் ஆக்கிரஹமுள்ள வித்துவான்களைப் போகச்செய்யவேணும், ஆங்கு பெரிய கிளர்ச்சி செய்யவேண்டும். இவ்வாறு தர்ம விஷயத்தில் கிளர்ச்சிகள் செய்தால் ராஜவிசுவாஸமும் காட்டப்பட்டதாகும். ஸாமர்த்தியமும் அடையப்பட்டதாகும். நமது தர்மசொத்தும் காப்பாற்றப்பட்டதாகும். திடமனதில்லாதவனும், பலமில்லாதவனும் ராஜாங்கத்திலும், ஜனஸமூஹத்திலும் அவமானத்திற்கே ஆளாவான். ஸபையோர்களே! தர்மாரக்ஷணைக்காக நாலாபக்கங்களிலும் நீங்களும் கிளர்ச்சியைக் கிளப்புவீர்களானால் ராஜாங்கதிலும் ஜனஸமூஹத்திலும் உங்களுக்கும் பிரதிஷ்டை கிடைக்கும். உங்க

ருடைய இஷ்டமும் ஸித்திக்கும். கோலாஹலம் செய்... ர்த்தாவும் குழந்தையைக் கவனிக்கமாட்டாள். ... கொடுக்கமாட்டாள். ஆகையால் தர்மரக்ஷணத்திற்காக... மவர்க்கதிகாரம் கிடைப்பதற்காகவும், பண்டிதர்களோடு... ஆலோசனை செய்து வேண்டிய உபாயங்களைத்தேட வேண்டும்... எங்கும் தர்மோபதேசம்செய்யவேண்டும். உபாயதத்தில்லாமை... ஸ்ரீகிருஷ்ணபகவானும்அனுக்ரஹிப்பார். பகவானுடைய அனுக்ர ஹம்இருந்துவிட்டால் அவசியம் இஷ்டஸித்தியுண்டாகும். ஆகை யால்அந்தகைய அனுக்கிரஹம் பெறுவதற்காக ஸ்ரீபகவானுடைய பாதபத்மங்களில் பன்முறை பணிந்து பிரார்த்தனை செய்து கொண்டுஇத்துடன்என்பிரஸங்கத்தை நிறுத்திக்கொள்ளுகிறேன்.

தாமோதர ...

கன்மம்.

உலகில் சுத்திபெறவிரும்பும் ஒவ்வொருவரும் தன் சரீரம், மனம், ஆத்மா இம்மூன்றுக்கும் சுத்தியைசம்பாதித்தல்வேண்டும். சரீரம் சுத்திபெற்றால் மனமும்சிறிது சுத்திபெறும். பிறகு மனத் தில் பாவசிம்சை முதலிய குற்றங்களுண்டாயின் அவற்றை விலக்க யோகம் முதலிய முறையைக்கொள்ளவேண்டும். ... னமாயின் மனம் சுத்திபெறும், சரீரமும் மனமும் சுத்திபெற் றால் ஆன்மாவும் அநாதிமலசம்பந்தம் நீங்கிச் சுத்திபெறும். மனம் சரீரம் சுத்திபெருவிடில் ஆத்மா சுத்தி பெறுவதில்லை. ஓர் சமயம் மனம் சுத்திபெறினும் சரீரம் சுத்திபெருவிடில் ஆன்மா சுத்தி பெறுவதரிது. ஏனென்றால் மனம் சுத்தமாயினும் அசுத்தமான சரீரத்திலுள்ள துர்குணங்களை அது பின்பற்றும். ஆகலின் முத லில் சரீரசுத்தியைச் சம்பாதித்தல் வேண்டும். அவ்விதம் சரீர சுத்தி பெறுவதற்குக் காலமறிந்து ஸ்நானமுதலிய நற்கிரியைகளை அநுஷ்டித்தலே காரணம். காலமறிந்து செய்கிற நற்கிரியை களால் சரீரம் நிர்மலமாவதுபோல் மற்றைய எதினாலும் நிர்மலமா வதில்லை. நமது சாஸ்திரங்களில் எந்த கன்மம் செய்யவேண்டு மென்று கூறப்படுகிறதோ அந்த காலமும் அங்கமாகிறது. சரீர சுத்திசம்பந்தமாக வைத்யசாஸ்திரத்தில் ரோகமும் அதையொழிக் கும் வழியும் எடுத்துக் கூறப்படினும் மனிதனுக்கு நல்லறிவு உண்

Roll-95
1174
601-690

...வேண்டிய வழியைப்பற்றி யாதும் சொல்லப்படவில்லை. மற்... ...ரோகங்களுக்கு சிகித்ஸை காணப்படுமாயினும் மனோவியா... ...சிகித்சை காண்பதரிது. கர்மசாஸ்திரங்கள் இருவகையிலும் ...ணம் இவ்விரண்டிற்கும் சுத்தியைப் பழக்கும் வழியைக் ...து.

...ஆர்யதேசத்தவர்கள் எழுதிவைத்த சாஸ்திரங்கள் தர்ம ...ஸ்திரங்களை அநுஸரித்தே எல்லா விஷயங்களையும் எடுத்துக் கூறுகின்றன. ஆகையால்தான் ஸ்மிருதிகளில்

जन्मान्तरकृतं पापं व्याधिरूपेण बाधते ।
तच्छान्तिरौषधैर्दानैर्जपहोमार्चनादिभिः ॥

...பிறப்பில் செய்த பாபம் வியாதியாக முடியும். அதை ஔஷ... ...தானம் ஜபம் முதலிய நற்கிரியைகளால் ஒழித்தல்வேண்டும். ...இருக்கின்றது. மற்றும் சாஸ்திரத்தால்தான் இதனுண்மை அறியவேண்டும். எங்ஙனமெனில் உலகிலுள்ள பிரஜைகளெல் லோரும் காலந்தவறாது ஸ்நானம் முதலியவற்றால் நற்குலடா... ...கும் குணங்கள் இவையெனத் அணி... ...ரியார்கள். மற்றும் ஸ்நாநத்தால் மேலழுக்கு நீங்குமென... ...ண்ணுவார்கள். காலையில் ஸ்நாநம் செய்வதால் பித்தம் சமன... ...றடையும், வியர்வை வெளிப் படும், அன்னம் ஜீர்ணமாகும், பு... ...லன்கள் விளங்கும், இரத்தத் தில் குற்றமற்றும், சொரி முதலிய ரோ... ...காலைப்பற்றிய வியாதி தொலை யும். ஆகவே சூரியோதயத்திற்கு... ...முன் செய்யும் ஸ்நாநமே குண மென்று சொல்லுவதுபோல் தர்மசா... ...ஸ்திரங்களும் நமது கடமை ...ய கர்மாக்களைச் செய்யவேண்... ...ம், இவ்விதம் செய்யவேண் ...ம். இந்த ஸமயத்தில் செய்யவே... ...ண்டும். இல்லையேல் தோஷங் ...ஸம்பவிக்குமென சிறு குழ... ...தைக்கு உரைக்கும் தாயைப் போல் சாஸ்திரங்கள் நம்மிடமன்புட... ...ன் கூறுகிறது. கர்மாவைச் ...து அதனால் சித்தசுத்தி பெற்று ஞானமுண்டாகி, மோக்ஷ ...மடைவது பிறவிப்பயனாகும், கர்ம... ...ம் மோக்ஷப்பலனையளிக்கா ...தென்பது சிலர் மதம், அது மோ... ...க்ஷமென்னும் பேரானந்தத் ...தை அளிக்காவிடினும் இப்பூமியிலு... ...ள் ஆனந்தத்திலும் அதிக மான ஆனந்தங்களுக்கு சாதகமான ...பித்ருலோகங்களையடையும் படி செய்யும். அங்ஙனம் கர்மமென்... ...வ மோக்ஷத்திற்கு நேரே காரணமல்லவென சாற்றும் வாதிக... ...ம் பரம்பரையாய் சரீரம்

[illegible]னம் இவைகளின் சுத்திக்கு ஹேதுவாய் நிற்குமென [illegible]ர்கள். ஆதலால் இது மோக்ஷத்திற்கு ஓர் பரம்பரா[illegible] [illegible] அவர் கருத்து. ஸ்ரீ ஜகத்குரு பகவத்பாதாள் வேதத்[illegible] [illegible]வும் ஓதவேண்டும். அதில் கண்ட கர்மாக்களை அ[illegible]டிக்க வேண்டும். அதனால் கடவுளை வழிபடவேண்டுமென்றும் கூறி[illegible]க்கிறார்கள். இதனால் இன்னவருக்கு கர்மம் [illegible]யமையாது [illegible]ன விளங்குகிறது. ஆயினும் இது காம்யம[illegible]வென்றும் கட[illegible]ள் வழிபாடுதான் நித்யமென்றும் அன்னவர் கருத்தாகும்.

முக்தியைப் பெற்ற ஒருவனுக்குப் பெறவேண்டிய பயன் வேறில்லையாகையால் அவனைவிட்டுத்தானே கர்மாக்கள் ஒழிந்து [illegible]ம். ஆயினும் கர்மாக்களை மனப்பூர்வமாக விட்டொழித்தல் குற்றமேயன்றி குணமாகாது. இக்க[illegible]மசாஸ்திரமோ இவைகளை நன்காராய்ந்து அவரவர் ஜாதிக்கேற்பட்ட கர்மாக்களை விதிக்கின்றதாதலால் அதில் அநாதிகாலமாக ஆர்யர்களுக்கோர் பற்றுண்டு. அவ்விதம் கர்மத்தை விட்டொழிப்பவனுக்கு எக்காலத்திலும் நல்லறிவு [illegible]ாவது கடின[illegible]மென்பது அவர் கருத்து. ஒருவன் கர்மத்தைமட்டில் அ[illegible]த்து வருவானானால் அவனுக்கு சித்த சுத்தி உண்டாகுமென்பதில் [illegible]டையில்லை. ஒருவர் உள்ளத்தை மற்றொருவரறிவது எக்காலத்திலும் கடினமாதலாலும் அவரவர் சரீரசுத்தியை மற்றவர் அறிதல் எளிதாகாதாதலாலும் அசுத்த சரீரியுடன் கூடிக்குலாவுதல் [illegible]த்தசரீரிக்கு என்றும் குற்றமாதலாலும் சேர்க்கையால்மட்டும் உலகில் குணதோஷங்கள் பரவுதல் உண்மையாதலாலும் உலகத்திற் கற்பழித்த மாதர்களுடன் கலந்துறவாடும் மற்றவர்க்கும் கற்புநிலைமை பிசகுமென்பதுபோலவும் ஞானிவேடம் பூண்டு கர்மத்தை ஒழித்துவிடும் சாமான்ய மனிதருடன் கலந்துறவாடுபவர்க்கும் அதே விருத்தியுண்டாகுமாதலாலும் மற்றவர் சரீரசுத்தியை நன்குணர்ந்து அவருடன்கூடி உறவாடவேண்டுமென்பது ஆன்றோர் கருத்து. ஒருவன் ஞானத்தைப் பெற்[illegible]லும் ஸ்நா[illegible] முதலிய நற்கர்மங்களால் சுத்த சரீரியாயின் அவனுடன் பழகி[illegible]வம் குற்றமாகாது.

(தொடரும்)

K. R. வைத்தினாதசாஸ்திரி,
மேலக்காவேரி.

ஃ————

வாரவிருத்தாந்தம்.

R011-95
1175

பின்பற்றுவார்களா? சேங்காவிபுரம் மஹாஜனங்கள் 12உ ஓர் பிராமணஸபை ஏற்படுத்தி பண்டிதர்களைக்கொண்டு காயத்ரீ முதலிய விஷயங்களை உபன்யஸிக்கச் செய்கின்றனர். மற்ற ஊர்களிலும் இதுபோன்ற ஸபை தோன்றில் நலம்.

தற்கொலையாகும்— மலையாளம் நம்பூதிரிஜாதியார் விவாஹம் ஸொத்து முதலிய விஷயங்களைச் சீர்திருத்த சட்டசபையில் ஓர் தீர்மானங்கொண்டு வருகின்றனர். அவர்கள் ஆசாரமே வேறு. மதவிஷயங்களில் அரசியற்சட்டத்தை நுழைப்பது தற்கொலையாகும்.

பரிதாபம் 20உ மதுரையில் அருகிலுள்ள கிராமத்தில் ஸ்வாமி தர்சனம் செய்ய நான்கு பெண்கள் இரவில் கிளம்பி செல்ல சி[illegible]டர்கள் அவர்கள் ஸொத்தைப்பிடுங்கியதுமல்லாமல் நன்[illegible] அடித்தார்கள். அவர்கள் ஆஸ்பத்திரியில் கிடக்கின்றனர் துணையில்லாமல் பெண்கள் கிளம்பி ஸ்வாமியின்மேல் தோஷங்கூறுவதால் பயனென்ன ?

சாரதாசட்டமகல— 16உ டில்லியில் இந்தியசட்டசபையங்கத்தவரான ஓர் மகம்மதியர் தலைமையில் ஒரு பெருங்கூட்டம்கூடி தங்கள் ஜாதியினரை அச்சட்டத்திலிருந்து விலக்கவேண்டுமென்று தீர்மானித்தனர் சபைத்தலைவர் மஹம்மதியர் அவர்கள் விடாமுயற்சியும் மதாபிமானமும் பலனைத் தரலாம். நம்மவர் கதி என்ன ?

பஞ்சம்—சீனாவில் ஏற்பட்ட பஞ்சத்தால் 4லக்ஷம் பேர் அடிமைகளாகி விற்கப்பட்டனர். 20 லக்ஷம் பேர் ஆகாரமின்றி மாண்டனராம். நமது நாடு பலவகையிலும் தனத்தை இழந்துவருகிறது. இதன் முடிவு என்னமோ ? விலையுள்ள உடுப்பு, அநாவச்ய ஆஹாரம், டாம்பிகச் செலவு இவைகளை அகற்றி முன்ஜாக்ரதையாயிருப்பார்களாக. தர்மங்கூறியவாழ்வால் இஹபரசுகம் கிட்டும்.

அபூர்வவழக்கு—கோயம்புத்தூர் கோவைக்கு அடுத்த சிங்காநல்லூர் என்ற கிராமத்தில் சண்டாளர் அக்கிரஹாரத்தில் நுழையக்கூடாதென ஓர் அந்தணர் கோர்ட்டில் வழக்கு தொடுத்திருக்கிறார். தை அமாவாஸையன்று தாத்காலிகமான

சண்டையைத் தடுக்க நடுப்பகல் வரை அங்கு தீண்டாதார் செல்லக்கூடாதென அதிகாரி உத்திரவிட்டனர். தக்கவர்களைக்கொண்டு சேரியிலுள்ளோருக்குத் தெய்வபக்தி பொது தர்மம் இவைகளை உபதேசித்து வந்தால் இது போன்ற சண்டை நிகழாது.

மதத்தை பரவச்செய்ய மேனாட்டு பாதிரிமார்கள் அவர்கள் கோயிலிலிருந்து பேசும் பேச்சை "ஒலிபரப்புங் கருவி மூலம் எங்கும் கேட்க ஏற்பாடு செய்கின்றனர். அம்மதாபிமானம் நமக்கிருந்தால் நமது நிலையே வேறாக இருக்கும்.

யாத்திரை பஞ்சாப் ஸநாதனதர்மஸபையார் இந்தியாவிலுள்ள ஸகல க்ஷேத்ரங்களுக்கும் நதிகளுக்கும் செல்ல ஓர் ஸ்பெஷல் ஏற்பாடு செய்திருக்கின்றனர். மாசியில் பிரயாணம்.

ஸந்தோஷம் மதாபிமானியும், பெருங்கொடையாளியும் தனிகருமான பிரம்மஸ்ரீ குன்னத்தய்யர் என்னும் S. சுப்பிரமணியய்யர் தஞ்சை ஜில்லா போர்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதையும் பலர் அதைக் கொண்டாடி வாழ்த்துவதையுங்கண்டு ஸந்தோஷம் கூடியவரையில் தன்னதீனத்திலுள்ள கலாசாலைகளில் மதப்படிப்பை விருத்திசெய்யும்படி பிரார்த்தனை.

விலக்க. சாரதாசட்டத்திலிருந்து பிராமணர்களை விலக்க டில்லி சபையில் ராஜாபஹதூர் கிருஷ்ணமாசாரியார் ஓர் பில் கொண்டுவருகிறார்.

ஆஹாரநியமம். லண்டனில் 24-உ ஓல்ட்பீல்ட் என்பார் பால் தேன் திராக்ஷை முதலிய ஸாத்விக உணவை உட்கொண்டால் வீண் சண்டை த்வேஷம் அகலுமென உபன்யஸித்தார். "ஆஹாரசுத்தௌ ஸத்வசுத்தி:" ஸாத்விகாகாரமே சிறந்ததென உபநிஷத்கள் முறையிடுகின்றன. நம்மவர் விழிப்பரோ?

ஸ்வராஜ்யம் ஏதோ கொஞ்சம் ஸ்வராஜ்யாம்சமாக சீர்திருத்தம் கொடுப்பதாக இந்தியாமந்திரி கூறி அதையோசிக்கத்தேசிய தலைவரில் முக்யமானவர்களை ஜயிலிலிருந்து விட்டுவிட்டார். ஸ்வதர்மத்தை விடாதஸ்வராஜ்யமே நாம் கோருவது.

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவசர்மா.